# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறு | 05 ஏப்ரல் 2026

**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*

மாதாந்திர நோக்கம்: சமூகம் – இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல்



# உயிர்த்தெழுந்து அனுப்பப்படுதல்

## இளைஞர்கள் நம்பிக்கையின் சாட்சிகள்

உயிர்ப்பு விளக்கங்களோடு தொடங்குவதில்லை. அது எதிர்கொள்வதன்வழி தொடங்குகிறது. பெண்கள் அச்சம், துயரம் மற்றும் நிச்சயமற்ற தன்மையுடன் கல்லறைக்கு வருகிறார்கள்- மகிழ்ச்சி, மற்றும் தூதுரைப்பணியுடன் வெளியேறுகிறார்கள்.

“போய் என் சகோதரரிடம் சொல்லுங்கள்” இறையியலைக் கற்றுக்கொள்வதற்குமுன் அனுபவம் உள்ளது. கட்டமைப்பு இருப்பதற்கு முன்பு அனுப்பப்படுதல் இருக்கிறது. தொடக்க கால திருஅவையில் திருத்தூதர்கள் பணி

நூலில் நாம் வாசிப்பதுபோல, பேதுரு அவரின் கருத்துகளை போதிக்கவில்லை. அவர் தான் கண்டதையும் வாழ்ந்ததையும் அறிவிக்கிறார்- சிலுவையில் அறையப்பட்ட இயேசு இப்போது உயிருடன் இருக்கிறார். மேலும் கொலோசையருக்கு எழுதிய கடிதத்தில் புனித பவுல் இவ்வாறு நமக்கு நினைவுறுத்துகிறார். கிறிஸ்து உயிர்த்தெழுந்ததால் நம்முடைய வாழ்க்கையும் உயரவேண்டும். நமது முன்னுரிமைகள், நம்முடைய எதிர்நோக்கு, உலகில் நாம் வாழும் முறைகள் அனைத்தும் உயரவேண்டும்.

இந்தக் கருத்துகள் இன்றைய நமது இளைஞர்களுக்கு மிகவும் பொருத்தமானது. அவர்களில் பலரும் அழுத்தங்கள், பதட்டம் மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் நிறைந்த உலகில் வாழ்கின்றனர். அவர்களுக்கு முதலில் தேவை திட்டங்கள் அல்ல; ஆனால் எதிர்கொள்வது. பொருளையும் வழிநடத்துதலையும் தரும் ஒரு உயிருள்ள கிறிஸ்துவை எதிர்கொண்டு சந்திப்பது.

மலேசிய கத்தோலிக்க இளைஞர் தினத்தில், பல இளைஞர்கள் இந்த ஏக்கத்தை தெளிவாகப் பகிர்ந்துகொண்டனர். “நாம் கிறிஸ்துவை தனிப்பட்ட வகையில் எதிர்கொள்ள விரும்புகிறோம், அவரைப் பற்றி கற்றுக்கொள்வது மட்டுமல்ல, அந்த நம்பிக்கையை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள நம்பகத்தன்மை உள்ளவர்களாக இருக்க விரும்புகிறோம். (MCYD இளைஞர்களின் நம்பிக்கை உருவாக்கம்)

ஆயர் மாமன்ற திருஅவை, இளைஞர்களின் தேடலில், தயாராக இருக்கும் பதில்களுடன் இல்லாமல் அவர்களுடன் இணைந்து பயணிப்பதன்மூலம் தொடங்குகிறது. **எப்போதும் கற்றலைப் பெற்றுக்கொள்பவர்கள் அல்ல, இளைஞர்கள் சாட்சிகளாகவும் இருக்கமுடியும் என்பதில் இறைவாக்குரைக்கும் திருஅவை உறுதியாக நம்பிக்கைக் கொள்கிறது.**

அச்சம் என்பது இறுதி வார்த்தை அல்ல என்று ஈஸ்டர் நமக்குக் கூறுகிறது. இளைஞர்கள் சமாளிக்க வேண்டிய பிரச்சினைகள் அல்ல; மாறாக அனுப்பப்படவேண்டிய நம்பிக்கையின் தூதுவர்கள்.

கிறிஸ்து உயிர்த்தெழுந்தார் என்று நாம் உண்மையிலேயே நம்பினால், நம் இளைஞர்களில் புதிய வாழ்க்கை எழுகிறது என்பதையும் நாம் நம்பவேண்டும். மேலும் அவர்களுடன் இணைந்து பயணிப்பது, அவர்களை உருவாக்குவது மற்றும் அவர்களின் தூதுரைப்பணியில் நம்பிக்கை வைப்பது நமது சவாலாகும்.

Celebrate Listen Walk (cf. Is 2:2-5)

MPC2026

**இன்றைய இறைவார்த்தை:**

திருத்தூதர்பணிகள் 10: 34, 37-43

திருப்பாடல் 118: 1-2, 16-17, 22-23

கொலோசையர் 3: 1-4 (அ) 1 கொரிந்தியர் 5: 6-8

யோவான் 20: 1-9 (அ) மத்தேயு 28: 1-10

இளைஞர்களே, வாருங்கள்,
மாற்றத்தை ஏற்படுத்துவோம்.
இயேசுவின் அன்பையும்
எதிர்நோக்கையும்
அனைவருக்கும்
கொண்டுவாருங்கள்.
– பேராயர் சைமன் போ

INTERNAL CIRCULATION ONLY
BUL 14/2026

**வெளியீடு:** மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி நிலையம் (API) | **Email:** api@archkl.org